**தலைப்பு 252 – தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 252 – தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 4 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12,200,000 இற்கான ஏற்பாடுகளில் நூற்றிற்கு 100 சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | 2021.12.21 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2021 மற்றும் 2022.04.26 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 செலவு முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி சொத்துக்கள் கொள்வனவு செய்தல் இடை நிறுத்தப்பட்டிருந்ததல். ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் போதியளவினதாக காணப்படாமை, கொவிட் தொற்றுநோய் காரணத்தினால் செயற்திட்டம் நிகழ்வு நிலையில் மேற்கொள்ளல், படிகள் செலுத்துவதற்காக சம்பளங்கள் மற்றும் பதவியணி நிர்வாக ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாமை போன்ற | நி.பி. 50 இற்கு இணங்க வருடாந்த செலவு மதிப்பீடு சரியாக மற்றும் தத்துரூபமாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணங்களினால் ஏற்பாடுகளின் சேமிப்புக்கு தாக்கம் ஏற்படுத்தியுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 26 செலவிடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,611,772,695 இற்கான ஏற்பாட்டுத் தொகையில் மீளாய்வாண்டு இறுதியளவில் கூட்டுத்தொகை ரூபா 514,229,950 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது ஒவ்வொரு செலவு விடயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 3 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 2022/04/26 திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை 03/2022 படி செலவுகளை வரையறுத்தல் அண்ணியச் செலாவணி நெருக்கடி, உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுக்காக சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாமை மற்றும் நான்காவது காலாண்டுக்காக ஏற்பாடுகள் இன்மை ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் மாற்றப்பட்டமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | நி.பி. 50 இற்கு இணங்க வருடாந்த செலவு மதிப்பீடு சரியாக மற்றும் தத்துரூபமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 66/69 ஏற்பாடுகளுக்கு இணங்க 03 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 9,469,000 தொகை ஏற்பாடுகள் வேறு 07 செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், அந்த 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 23,200,605 இற்கான ஏற்பாடுகள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அவை குறிப்பிட்ட செலவு விடயங்களின் தேறிய ஏற்பாடுகளில் 19 சதவீதம் முதல் 70 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | 2021.12.06 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 02/2021 மற்றும் 2021.12.21 திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2021 இன் படி காலாண்டு அடிப்படையில் ஏற்பாடுகள் வழங்குதல் மற்றும் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் நான்காவது காலாண்டிற்காக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படாமையினால் செலவு விடயங்கள் இடையே ஏற்பாடுகள் மாற்றுவதற்கு நேரிட்டிருந்தமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | நி.பி. 50 இற்கு இணங்க வருடாந்த செலவு மதிப்பீடு சரியாக மற்றும் தத்துரூபமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இறந்த 3 உத்தியோகத்தர்களுக்கு உரிய கூட்டுத்தொகை ரூபா 453,130 தொகை மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 09 உத்தியோகத்தர்களுக்குரிய கூட்டுத்தொகை 489,984 தொகை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் இயலாமல் இருந்தது. | இறந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதி, மரண பணிக்கொடை கொடுப்பனவின் போது தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர் காலத்தில் | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

எடுப்பதற்கு தீர்மானித்துள்ள நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | | |
| இலங்கை சனநாகய சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (அ) நி.பி. 102 முதல் 109 வரை | - | 2021 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி 480 விடயங்களில் பற்றாக்குறை ஒன்று காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரை நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டிற்குரிய பண்டக் கணிப்பீட்டில் பற்றாக்குறை தொடர்பாக நி.பி. 102 – நி.பி. 109 இன் படி உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) நி.பி. 340 | - | அடியிதழ் புத்தகப் பதிவேடொன்று பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) நி.பி. 891 | - | பிணை வைப்புப் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | திணைக்கள உத்தியோகத்தர்களின் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அதன்படி எதிர் காலத்தில் பிணை வைப்புப் பதிவேடு பேணிச் செல்லப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலை நோக்கு மற்றும் செய்பணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 தரவு அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஏப்ரல் 24 திகதி அளவிலும் அச்சிடப்பட்டிருக்காததுடன், அந்தத் தாமதக் காலம் குறிப்பிட்ட தினத்தை விட 01 இற்கும் 1.5 இற்கும் இடைப்பட்டு காணப்பட்டது. | மிகவும் அவசரமான தேசிய தேவைப்பாடு ஒன்றாக காணப்பட்ட "பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக வீட்டு அலகு கணிப்பீடு" இல் திட்டமிடல் அலுவல்களுக்காக முக்கியத்துவம் வழங்கி செயற்படுவதற்கு நேரிட்டமையால் தெரிவு கணிப்பீட்டுப் பிரிவு வேலைப் பழு காரணமாக இந்தக் வெளியீட்டை வெளியிடுவதில் சிறு தாமதம் ஏற்பட்டிருத்தல், தரவுகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக எதிர்பார்த்த காலத்தை விட கூடிய காலம் எடுத்தல், 2021 தேசிய கணக்கு வருடாந்த அறிக்கையில் புதிய கண்ணோட்டத்தில் வெளியிட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டமையால் 2021 ஆண்டின் அறிக்கை வெளியிடல் தாமதமடைய நேரிட்டமை மற்றும் COVID – 19 தொற்று நோய் நிலைமை காரணமாக தாமதமடைதல் ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | விதிக்கப்பட்ட கால வரையுள் தரவுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 24 தரவு அறிக்கைகள் 2023 ஏப்ரல் 24 திகதி வரையும் இணையத்தளத்திற்கு வெளியிட்டிருக்காததுடன், 12 தரவு அறிக்கைகள் வெளியிட்டிருந்தது குறிப்பிட்ட தினத்தை விட 01 மாதம் மற்றும் 20 மாதங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சின் தாமதத்தின் பின்னர் என அவதானிக்கப்பட்டது. | மிகவும் அவசரமான தேசிய தேவைப்பாடு ஒன்றாக காணப்பட்ட "பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக வீட்டு அலகு கணிப்பீடு" இல் திட்டமிடல் அலுவல்களுக்காக முக்கியத்துவம் வழங்கி செயற்படுவதற்கு நேரிட்டமையால் தெரிவு கணிப்பீட்டுப் பிரிவினால் வேலைப் பழு காரணமாக இந்தக் வெளியீட்டை வெளியிடுவதில் சிறு தாமதம் ஏற்பட்டிருத்தல் தரவுகளின் | குறிப்பிட்ட கால வரையுள் தரவுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக எதிர்பார்த்த காலத்தை விட கூடிய காலம் எடுத்தல், 2021 தேசிய கணக்கு வருடாந்த அறிக்கையில் புதிய கண்ணோட்டத்தில் வெளியிட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டமையால் 2021 ஆண்டின் அறிக்கை வெளியிடல் தாமதமடைய நேரிட்டமை மற்றும் COVID – 19 தொற்று நோய் நிலைமை காரணமாக தாமதமடைதல் ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டது. | |
| (இ) விவசாயத்துறைக்குரிய அறிக்கைகள் தொடர்பாக தரவுகள் வெளியிடும் அடுத்த நாள் குறிப்பு மற்றும் தரவுகளை விடுவித்திருந்த நாட்கள் தொடரபாக உரிய தகவல்கள் விவசாய மற்றும் சுற்றாடல் பிரிவினால், ஆய்வுகள் மற்றும் விஷேட கற்கை பிரிவிற்கு வழங்கியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் உட்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதென கருணையுடன் அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட தகவல்கள் உரிய காலத்தில் வழங்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரைபு வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி திணைக்களத்தின் 13 பிரிவுகளினால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கிய எதிர்பார்த்த வெளியிடல் மட்டத்தை நெருங்கியிருக்காததுடன், அவற்றின் கருமங்களை நிறைவேற்றும் முன்னேற்றம் 15 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மேலும், 2023 ஏப்ரல் 06 திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் மென் பிரதியின் படி சுகாதார அமைச்சில் அமைந்துள்ள புள்ளி விபரப் பிரிவின் 03 | அனைத்து ஆவணங்கள் மற்றும் உபகரணங்கள் வினியோகிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ஏற்பட்டிருந்த எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக கிடைக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மீது 2022 ஆண்டின் போது வினியோகம் மேற்கொள்ளக் கூடிய அளவு உபகரணங்கள் மாத்திரம் வினியோகித்தல் மேற்கொள்ளல், COVID – 19 மற்றும் அதன் மூலம் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியினால் அனைத்து கருமங்களினதும் கால சட்டகம் திருத்தப்படல், அந்த ஆண்டின் போது அடிக்கடி மின்சாரம் தடைப்படல் காரணத்தினால் | திட்டமிடப்பட்டவாறு செயற்பட வேண்டும். |

கருமங்கள் மற்றும் தொழில் அமைச்சில் அமைந்துள்ள புள்ளி விபரப் பிரிவில் 02 கருமங்களும் உள்ளவாறான வெளியீடு எதிர் பார்த்த வெளியீட்டின் சதவீதமாக 75% விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இணைய வசதிகள் வழங்குவதற்கு முடியாமல் போதல் அச்சு இயந்திர உதவியாளர் பதவி வெற்றிடமாகல், நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையின் முன்னிலையில் எரிபொருள் பெற்றுக்கொள்ளல் வரையறுக்கப்பட்டிருந்தமையால் 2022 ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த கள மேற்பார்வை அலுவல்கள் நிறைவேற்ற முடியாமல் போதல் சில கணிப்பீடுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும் உரிய அங்கீகாரம் 2022 ஆண்டில் கிடைக்கப் பெறாமை, பாதீட்டுச் சுற்றறிக்கை மூலம் அரச செலவுகள் வரையறுக்கப்படல், கடதாசி தட்டுப்பாடு காரணமாக எதிர்பார்த்த மட்டத்தில் நிறைவேற்ற முடியாமல் போதல், 16 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களின் கீழ் காணப்படும் சுட்டிகளை கணிப்பதற்காக செய்முறை ஒன்று தேவைப்பட்டமையால் ஆரம்ப அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு கணிப்பீடு மேற்கொள்வதற்காக ரூபா 10 மில்லியன் தொகை ஒன்று மதிப்பீடு என சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேவையான ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட கருமங்கள் மேற்கொள்ள முடியாமல் போதல் போன்ற காரணங்கள் மற்றும் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கை முறைகள் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் இலக்கம் 4.1.1 இற்கு இணங்க பெறுகைகள் குறிப்பிட்ட காலத்தினுள் பூர்த்தி செய்யப்படும் என உறுதிப்படுத்துவதற்காக, முழுமையான பெறுகை செய்முறை வினைத்திறனுடன் திட்டமிடப்பட வேண்டியிருந்த போதிலும், குடிசன வீட்டுவசதிகள் தொகை மதிப்பு – 2021 இற்காக பைகள் கொள்வனவு செய்தல் கருமம் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2020 ஜுலை, 2021 ஜனவரி மற்றும் 2022 ஆகஸ்ட் மாதங்களில் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட பெறுகைகள் பூர்த்தி அடைந்திருக்கவில்லை. மேற்கூறிய பெறுகைகள், பெறுகை திட்டத்தின் படி 2020 நவம்பர் 27 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கால ரீதியாக திட்டமிடப்பட்டவாறு அவை நடைபெறாத காரணத்தினால் சந்தையின் விலை அதிகரிப்பதனால் திணைக்களத்திற்கு கூடிய கிரயத்தில் எதிர் காலத்தில் கொள்வனவு செய்வதற்கு நேரிடும் என அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் 2020 ஆண்டின் பெறுகை திட்டத்தின் படி குடிசன வீட்டு வசதி தொகை மதிப்பு 2021 ஆண்டிற்காக பைகள் கொள்வனவு செய்யும் கருமங்கள் மேற்கொள்வதற்காக பின்வருமாறு எதிர்பார்க்கப்பட்டது.<br>விலைகூறல்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி – 2020.07.15<br>வழங்க வேண்டிய திகதி – 2020.09.04<br>பூர்த்தி செய்யும் திகதி – 2020.11.27<br>கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் திகதி – 2020.12.27<br><br>அரச பெறுகை வழிகாட்டல் இலக்கம் 4.1.1 இற்கு இணங்க பெறுகைகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யபடுவதனை சான்றுபடுத்துவதற்காக முழுமையான பெறுகை செய்முறை திட்டமிட்ட போதிலும் 2020 ஆண்டின் போது வழங்குனர்கள் வழங்கியிருந்த மாதிரி விபரக் குறிப்பும் இணங்கியிருக்காமை, 2021 இல் சலுசல நிறுவனத்தினால் உடன்படிக்கைக்கு முரணாக செயற்படுதல் மேற்படி பெறுகை மேற்கொள்ளும் காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றம் பொருளாதார நெருக்கடி நிலைமை ஆகிய காரணங்களினால் இந்த பைகளின் பெறுகை அலுவல்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் செய்ய முடியாமல் போனது என கருணையுடன் தெரிவிக்கின்றேன். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் இலக்கம் 4.1.1 இற்கு இணங்க பெறுகைகள் குறிப்பிட்ட காலப் பகுதியுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது அச்சுப் பகுதியின் 02, இரண்டு மாடிக் கட்டிடங்களின் மேல் மாடி திருத்த வேலை மேற்கொள்ளாமையால் அந்த 02 மேல் மாடிகளிலும் 6856 சதுர அடி வளாகம் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | கூரை உடைந்துள்ளதால் திருத்த வேலைகள் மேற்கொள்ளக்கூடிய நிலைமையில் காணப்பட்டது. | திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துதல் அல்லது மிகையாக காணப்படின் வேறு தரப்பினருக்கு வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஜனவரி 11 திகதி விபத்துக்குள்ளாகிய கப் வண்டியொன்று அறிக்கை திகதி வரை தலைமை அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், முழுமையான காப்புறுதி உள்ளடக்கம் பெற்றிருந்த இந்த வாகனத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டிருந்ததெனவும், உரிய நிலைக்கு மாற்ற முடியாது எனவும், உள்நாட்டு முகவர் நிலையத்தினால் அறிவித்திருந்த போதிலும் முழுமையான் காப்புறுதி நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்காமல் தனியார் கராஜ் ஒன்றின் மூலம் திருத்த வேலைகள் மேற்கொண்டு காப்புறுதி நிறுவனத்தில் இருந்து ரூபா 1,514,625 இற்கான நட்டஈடொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த திருத்த வேலையின் பின்னரும் வாகனம் ஓட்ட நிலையில் காணப்படாமையால் தொடர்ந்தும் தலைமை அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. | 2023.03.22 திகதி நிதி அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி எமது திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் நிதியமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இணைந்து கோப்புக்களை ஆய்வு செய்து அறிக்கையொன்று வழங்கிய பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், குறிப்பிட்ட வாகனம் பாதையில் பயன்படுத்த முடியாது என மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால் அறிவித்தமையால் அகற்றல் குழுவொன்று நியமனம் செய்து அந்த அறிக்கையை அடிப்படையாக கொண்டு குறிப்பிட்ட வாகனத்தை சாரதிப் பயிற்சி அலுவல்களுக்காக இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபைக்கு வழய்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட அகற்றல் குழு தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளது. | முறையான விசாரணை ஒன்று நடாத்தி பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தலைமை அலுவலக கட்டிடத்தின் ஏழாவது மாடியில் மேற்குப் பிரிவில் ¾ அளவு இட அளவொன்று கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட நாள் முதல் கணக்காய்வுத் திகதி வரை பயன்படுத்தப்படாமல் | ஏழாவது மாடியின் மேற்கின் ஒரு பகுதியில் அரச கணக்காய்வுப் பகுதி நிறுவப்பட்டுள்ளது. மீதியான இட வசதிகள் தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், கடந்த ஆண்டில் கிடைத்திருந்த | முழுமையாக பயன்படுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. ஏழாவது மாடியில் மேற்கின் முழுப் பகுதியும் மையப்படுத்தப்பட்ட வாயு சீராக்கி முறைமை ஒன்றின் கீழ் வாயு சீராக்கல் மேற்கொள்ளப்படுவதனால் அந்த வெற்றுப் பகுதிக்காக தொடர்ச்சியாக வாயு சீராக்கல் மேற்கொள்ளப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் தேவையான நிர்மாண வேலைகள் 100% பூர்த்தி செய்ய முடியாமல் போனது. மையப்படுத்தப்பட்ட வாயு சீராக்கல் முறைமையின் கீழ் வாயு சீராக்கல் மேற்கொள்ளப்படுவதனால் ஏழாம் மாடியில் மேற்குப் பகுதி முழுப் பகுதிக்குமாக வாயு சீராக்கி இயந்திரம் செயற்படுத்தப்படுகின்றமையால் அந்த பிரிவின் ஒரு பகுதி மாத்திரம் வாயு சீராக்கல் செயற்படுத்த இயலாமல் உள்ளது. | |

**4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 34 சதவீதம் எனப்படும் 596 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்தின் 146 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 147 வெற்றிடங்களும் அதில் அடங்குகின்றன. | - முன்றாம் மட்ட அங்கீகரிக்கப்பட்ட புள்ளி விபரவியலாளர் 200 பதவிகளில் 37 சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர்கள் அடங்கியிருப்பதனால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் போது வெற்றிட எண்ணிக்கையை கணித்துள்ளது அந்த இரண்டு (02) பதவிகளுக்காக ஒன்றித்த பதவியணி 200 என கணித்து ஆகும்.<br><br>- இரண்டாம் மட்டத்தில் 04 முறைமை கட்டுப்பாட்டாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், உத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் இல்லை. அந்த பதவிகள் வகிப்போருக்கு தனிப்பட்ட முறையில் என மற்றும் பின்னர் முடிவுறுத்தலுக்கு கீழ் படிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் வெற்றிடங்கள் இல்லை என கணிக்கப்பட்டுள்ளது.<br><br>- | ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து முறைப் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | - இரண்டாம் மட்டத்தில் சிரேஷ்ட முறைமை இயக்குனர்கள் பதவி 01 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், உத்தியோகத்தர் தற்போது சேவையில் இல்லை. அந்தப் பதவி வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் என்ற வகையில் பின்னர் முடிவுறுத்தும் கீழ் படிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் வெற்றிடங்கள் காணப்படவில்லை என கணிக்கப்பட்டுள்ளது.<br><br>- இரண்டாம் மட்டத்தில் தரவுப் பதிவு இயக்குனர் 05 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 03 உத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் உள்ளனர். வகிப்போருக்கு தனிப்பட்ட முறையில் என மற்றும் பின்னர் முடிவுறுத்தலுக்கு கீழ் படிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் வெற்றிடங்கள் இல்லை என கணிக்கப்பட்டுள்ளது.<br><br>- திணைக்களத்தின் கடமை அலுவல்கள் நடாத்திச் செல்வதற்காக வெற்றிடங்களாக காணப்படும் பதவிகளை நிரப்புதல் அத்தியவசியமாகும். அதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய மற்றும் 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இற்கு இணங்க மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிருவாக சுற்றறிக்கை 02/2018 இன் படி திணைக்கள உத்தியோத்தருக்காக மனிதவள திட்டமொன்று தயாரிக்கும் அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |